உ

சிவமயம்.

# "துறவி"

மன்மத
மலர் 1

திங்கள் வெளியீடு.

மார்கழி
இதழ் 12

துறவி

## தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,
## திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர்:

சுவாமி சொரூபானந்தா

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

ஓம்.

# " து ற வி "

## பொருளடக்கம்.


| எண். | | | பக்கம். |
|---|---|---|---|
| 1 | கடவுள் வாழ்த்து | — | 161 |
| 2 | அநுதாபம் | — | 161 |
| 3 | பொருள் | — ஐயாறு அடிகள் | 163 |
| 4 | அவிரோதவுந்தியார் | — சுவாமி முக்தானந்தா அவர்கள் | 164 |
| 5 | சிவஞானபோதம் | —திருநீ. சண்முகானந்த சுவாமிகள் | 167 |
| 6 | யோகசிகோப நிஷத் | — திரிமூர்த்தி சுவாமிகள் | 171 |
| 7 | த. நா. து. ச. மாநாட்டு நிகழ்ச்சிகள் | — | 173 |


## முக்கிய அறிவிப்பு.

**அன்புடையீர் !**

நம் " **து ற வி** " இதழ் மார்கழியோடு ஓராண்டு நிறைவெய்து கின்றது. அடுத்த தைத்திங்கள் இரண்டாவதாண்டின் ஆரம்பமாகும். இனி " **து ற வி** " இதழ் அதிகபக்கங்களில் பல பெரியார்களின் சிறந்த கட்டுரைகளைத்தன்னகத்தேகொண்டு வெளிவரும். எனவே அன்பர்கள் துறவிகள், அனைவரும் இத்துறவிக்குழந்தையை அன்போடு ஆதரிக்க வேண்டுகிறோம்,

இதுவரை சந்தா அனுப்பாத அன்பர்கள் மார்கழி 15-ந் தேதி (30—12—1955) க்குள் "**து ற வி**" செயல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதோடு தங்கள் நண்பர் உறவினர்களையும் சந்தா தாரர்களாகச் சேர்த்தும் ஆதரிக்க வேண்டுகின்றோம்.

**சுவாமி சொரூபானந்தா,**
" து ற வி " செயல் நிலையம்,
*கீழ்ப்பாலூர் (P. o.) கலசபாக்கம் (வழி)*
*போளூர் தாலூகா, (வ. ஆ. ஜி.)*

ஓம்.

# "துறவி"

| மன்மத<br>மலர் 1 | தமிழ்<br>**திங்கள் வெளியீடு.** | மார்கழி<br>இதழ் 12 |
|---|---|---|

### கடவுள் வாழ்த்து.

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

—மணிவாசகர்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

## அநுதாபம்.

30—11—55-ல் தஞ்சை, இராமனுதபுரம் ஜில்லாக்களில் பரவலாகவும், மதுரையில் சிலபகுதிகளிலும், திருச்சி ஜில்லாவில் புதுக்கோட்டைப் பிரதேசத்திலும் புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல திறத்தாலும் உதவி செய்ய முன் வருகவென அழைக்கின்றோம்.

அன்பும் அறனும் தங்கள் பண்பெனக் கொண்டு வாழும் நம் தமிழகத்தே என்றும் மறக்கமுடியாத இயற்கையின் செயலைக் கண்டு யார் தான் மனம் உருகாது இருக்க முடியும். மனம் உருகினால் மட்டும் போதுமா! தமிழனின் பண்பாடு அவ்வளவின் அமைந்ததா இல்லையே! பகுத்துண்டு வாழும் பண்புடையராயிற்றே. பிறக்கும் பொழுது கொண்டு வந்ததுமில்லை இறக்கும் பொழுது கொண்டு போவதுமில்லை. இடையே இறைவனால் கொடுக்கப்பட்ட செல்வத்தினை

வருமை பிணி, ஆபத்து முதலியவைகளால் அல்லலுறும் மக்களுக்கு மனமுவந்து ஒல்லும் வகையால் உதவி செய்ய வேண்டாமா!

"வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" -என்ற நம்வள்ளுவனார்

வாக்கை எண்ணி வாரி வழங்க வேண்டாமா! ஒரு நாடு இளைத்தால பல நாடுகளும் பணிபுரியும் இந்த நாளில், நாட்டுப் பற்றுடைய யார் தான் இரக்கங்கொண்டு இனியவை செய்ய முன்வராதிருப்பர்.

**அன்பிற் சிறந்த பெரியோர்களே! அறிவிற் சிறந்த தாய்மார்களே!!**

நீங்கள் ஒவ்வொருவரும் முடிந்த அளவில் உணவு, உடை பொருள் முதலியவைகளை அன்புகூர்ந்து சங்கங்கள் மூலமோ அரசியலார் மூலமோ, அல்லது நேரிலோ உதவி புரிய வேண்டுகிறோம்.

ஒருநாடு-நாடெனச் சொல்வதற்குரிய பண்பாடெலாம் நிறைந்து அறவொழுக்கத்தில் மக்கள் நிலைபெற்றுள்ளனர் என்றால் அதன் பெருமை அந்நாட்டை ஆளும் மன்னனுடையதேயாம். அம்மன்னனுக்கு அஞ்சாமை, யீகை, யறிவு, ஊக்கம் இன்னான்கும் ஒருங்கே அமைய வேண்டும். இவையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர் நம் தமிழகத் தலைவர் (முதலமைச்சர்) ஸ்ரீ காமராஜர் என்பதை அவர்கள் ஆற்றிவரும் தொண்டினைக் கவனித்தால் இனிது விளங்கும் 30-11-55-ல் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இடங்கட்கெல்லாம் தங்குழுவினரோடு சென்று நேரில்கண்டு அல்லலுறும் மக்களுக்கு, உணவு, உடை, இருக்க இடம் முதலியவைகளை மனம் எண்ணுவதற்குள் செயலில் காட்டிப் பெரும் பணியாற்றிய, ஆற்றும் பெருந் தகைமைக்கு தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது

வீடு, மனை, மாடு, பொருள் முதலியவைகளை இழந்து பரிதவிக்கும் மக்களுக்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னார் அனைவருக்கும் ஆறுதல் அளிக்க ஆண்டவனை வேண்டுகின்றோம். இறையருள் புரிவதாக. —பதிப்பாளர்.

**குறிப்பு.**

"துறவி" என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துக்களை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொறு தமிழ் மாதம் 15உக்குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

# பொருள்.

தவத்திரு. ஐயாறு அடிகள்
(சித்தபாலைய தேசிகர் ஆதீனப் புலவர், அடிவாரம், பழனி)

முன் (ம 1 இ 10 ப 137) தொடர்ச்சி.

செம்பொருளை யுணரவேண்டும் அவாவினையறுத்தல்வேண்டும். பேரின்பப் பெருவாழ்வினை எய்தல் வேண்டும். இவ்வாறு எய்தல் மக்கட் பிறப்பான் ஆயபயன் என்பதாக இதுவரை நினைவிற்குக் கொண்டு வந்தேம். இங்ஙனமெய்தாதார் எத்தகையார் என்பதுபற்றி எனது சிற்றறிவிற்குத் தோன்றியவாறு சிறிது நினைவிற்குக் கொண்டு வருவேம்.

செய்யத் தக்க செயல்கள் இன்னவை, தகாதசெயல்கள் இன்னவை, என்று கற்றுக் கேட்டு ஆராய்ந்து செயலுக்குக் கொண்டு வருபவர்களே மக்களாவார்கள், அல்லாதார் மக்கள் ஆகார். மாக்களே

"தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே" —கம்பன்.

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே.
சொல்லதிகாரம். —தொல்காப்பியம்.

இந்த நூற்பாவில் **மக்கள்** என்று சுட்டப்படும் பொருள் **உயர்திணை** என்றார். இதனால், பிறப்பால் மக்களே யானாலும் மக்கள் என்று மாண்புடையார் கருதாவழி அஃறிணையே எனக் கோடல் வேண்டும். அவரல்லாத பிற, அஃறிணையே என்றாலும், அஃறிணை என்ற எண்ணமின்றி உயர்திணையாக மதிப்பின் அவையும் உயர் திணையே.

நன்று தீதென்றியல்தெரி நல்லறிவினையுடைய நாம், செல்வம் கல்வி, கேள்வி, அறிவு, அன்பு, அருள் என்றிவற்றை யுடையராய் வாழ்வாங்கு வாழ்ந்து இன்பப் பேற்றினை எய்துவோமாக.

முற்றும்.

## அவிரோத வுந்தியார்.

தவத்திரு சுவாமி முக்தானந்தா அவர்கள்
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.

முன் (ம 1 இ 11 ப 150) தொடர்ச்சி.

**உடலை யானென் றெண்ணுகின்ற மயக்கம் எதனால் விடு படு மெனல் :—**

மக்கட் பிறவியினர் பெரும்பாலோரும், உடம்பை யானென் றே கொள்ளுகின்றனர் இவ்வாறு, உடம்பை யானெனக் கோள் ளுவது; அகங்கார மெனப்படும். இவ்வுடம்பு, தானல்லாதது, அதனைத் தானாகக்சொள்ளுவது மருளாகும். இம் மருள், என்று நீங்குமோ அப்பொழுதே, மாசற்ற காட்சியுளதாகும். இம்மருளால் பீடிக்கப் பட்டவர்களே, இம்மைக்குட்பட்ட மக்கள். இந்தப்பிடி யிலிருந்து, உறுதியாக விடுபடவேண்டியவர்களே.

இப் பிடிக்குள்ளிருந்து, தானே தப்பியோடவேண்டும். முன் னரே, தாம் பலவகைக் கட்டுகளால் சூழப்பட்டுள்ளார்கள். அக் கட்டுகள், அவர்களை இருகப்பிணித்துள்ளன. ஆயினும் அவர்கள், அப் பிணிப்பைக் கட்டென அறியார்கள். கட்டென வறியும் வேளை யும், எங்கோ சிலருக்கு வருவதுண்டும். வந்தபொழுதுதான், "தந்தை யார் போயினர் தாயரும் போயினர், தாமும் போவார், கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார், கொண்டு போவார், எந்த நாள் வாழ் வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே," என்ற உறுதி மொழியின், உண்மைப் பொருளை ஆழ்ந்து கருத நேரும், அங்ஙனம் ஆழ்ந்து கருதவே, உயிர்விட்டு விடப்போகிறது, சுற்றத் தார்கள் எல்லோரும் ஒன்று கூடி,உடலைச் சுட்டு விடப்போகிறார்கள், என்ற நினைவு வரும். வரவே, கட்டினின்றும் தப்பியோடக் காலம் வருமா? என்று கவலை கொண்டிருப்பார்கள். அந்த வேளையே, உள்ளத்தும் உறைகின்ற இறைவன், புறத்தே அருட் குரவனாக வருகின்ற வேளையாக இருக்கும்.

அப்படி, குரவன் வருவதற்கு முன்னரே, தமது அருளொளி, யாகிய ஏவலாளனை, முன்கூட்டி அனுப்புகின்றார். அந்த ஏவலாளன் வந்தவுடன் சிற்சில நல்ல அறிகுறிகள் காணப்படும். அவை; பெரி யோர்கள் சிலரை எதிர்பாராத வகையிற் காண நேரும், உள்ளங் குளிருஞ் சொற்கள் காதிற் கேட்கப்படும், தான் நினையாமலேயே உடம்பு சிலிர்க்கும்படியான, நல் நினைவுகள் உளவாகும்; மன

முருகும்படி அன்பு மலரும். அடிக்கடி அன்பினுல் தூண்டப்பட்டு ஆலயங்கட்கும் பெரியோர்களிடமும், செல்ல நேரும், இறைவன் திருவுருவின் முன்னர் உளங்கனிந்து நிற்க நேரும், இறைவா! எனது கட்டறுத்து விடுபடு விப்பாய் ஐயா! என்று அலற நேரும், ஒருவரும் அருகில் இல்லாத பொழுது பார்த்து, நினைந்து, நினைந்து, அலறியலறி வேண்ட நேரும், இல் வாழ்க்கையிலும், சூழ்நிலைகள், கலாம் விளைத்து மாறுபடத் தொடங்குகின்றன. இவனது மனம், இந்த நிலையில் புண்படுகின்றது. புண்படப் புண்பட மண், பெண், பொன் என்ற புறப்பற்றினின்றும் சிறுகச் சிறுக, நழுவத்தொடங்குகின்றது. நழுவ நழுவ, கருதுகின்றுன். மண் முதலாயவற்றை, அண்டி நிற்கும் வரை, உடம்பை நானென்றுள்ள இந்த அறியாமையும், இதனுல் விழைந்த மருளும், மிகுதிப்படுமேயன்றி. என்னைவிட்டு நீங்கப்போவதில்லை யென்று; முன்னர் தானே அவைகளை விட்டு நீங்க, எண்ணுகின் றுன். எண்ணினுன், அனைவரையும் மனதால் வெறுத்தான். பிறர் பாராத வேளை பார்த்திருந்தான். ஒரு வேளை சூழ்ந்துள்ளவரனை வரும், தம் தம் அலுவல்களில் ஆழ்ந்துள்ளார்கள். அதுபொழ்து, வழி வழியாகப் பிறவிக்கு வித்தாகவுள்ள, உலக இயல்பெனும் உரக் கத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என வறிந்தான். இதுவே தக்கதும் மிக்கதுமாக, அவன் எதிர்பார்த்திருந்த நல்வேளை, என்றெண் ணினுன். வெளிக்கிளம்பினுன். உற்றார் அறியாவிடமாக உற்றிருக்கக் கருதினுன். கடு நடை கொண்டான். திரும்பியும் பாராளுய், வேடுவர் வலைப்பட்டு விடுபட்ட மான்போல் ஓடினுன். அப்பொழுதே மண் முதலாயவற்றை விட்டவனுனுன். அவையும் பின் தங்கின. இவனை விட்டன. இவனும் முன்னேறினுன். தான் தேடும் பொருள் மனித வேடமாய், எதிரில் வதிந்திருப்பதைப் பார்த்தான். ஐய! "மாய வாழ்வு எனுஞ் சோகத்தால் மயங்கினேன்" என்றுன். அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினுன் மனித வேடந்தோன்ற நின்ற மறைப்பொருள், கண் முதலிய ஐந்து பொறிகளும் நீயல்லை என்றருளியது. சற்றுமலைத்து நின்றுன். மனமுதலாகவுள்ள உட் கருவிகளும் நீயல்லை, என்று உரைத்தது. மயங்கி மருண்டான். இவைகட்கு வேருகாமல், ஒன்றுபட்டு நானெனக் கொள்ளவும் சொல்லவுங் காணப்படும் இவ்வுடம்பும் நீயல்லை யென்றது, எதிரே தோன்றியுள்ள பொருள், விட்டது தொல்லை. அதாவது பழமையான அறியாமை நீங்கிற்று, துன்பந் தொலைந்தது. இனி உள்ளது, இன் பந்தானே, அவ்வின்பமே; மனித வடிவில் மறைந்து, குருவாகக் காட்சியளித்தது. அதுவே உணர்த்த உணர்ந்துய் வானுயினுன். என்றுள்ள இந்த நிலையைப் பெறுவதற்கு வழி வகுக்கின்றது அவி ரோதவுந்தியார்.

**13 அ. உந்தியார் :—**

விறகா ரழல்போலு மின்னுர்பொன் ஞுதி
உறுகாறும் அந்தமை உந்தீ பற
உள்ளக்கண் மாருதென் றுந்தீ பற

பொழிப்பு:-மின்னார் பொன் ஆதி, உறுகாறும், அந்தமை விறகு ஆர் அழல் போலும், உள்ளக் கண் மாறாது என்று உந்தீபற. (என்பதாம்)

பொருள்:—'மின்னார்'—(உயிர்ச் சார்பு என்றதில் முதன்மை வாய்ந்த) மின் போன்ற இடையினையுடைய மனைவியும், (மின்னார் என்று பொதுவாகக் கூறியுள்ளதனால், தனது நிறையழியும்படி எண்ணுதற்கிடமாகவுள்ள ஏனைய மாதரையும் உடன் கொள்ளுவதோடு, உயிர்ச்சார்பில் எஞ்சிய, புதல்வன் முதலானவர்களையுங் கொள்ளுதல் அமையும்) 'பொன்'— (உலக வாழ்க்கையில், உறுதுணையெனப் பற்றுதற்கு இடமான, செம்மை, வெண்மை, பொன்மைகளாகவுள்ள) பொன்னும், (பணமும்) 'ஆதி'—(மக்களைபிறவிப் பிணியிலிருந்து விடுபடாவண்ணம் மயக்கி இழுத்துக்கொள்ளும் ஆற்றல் அமைந்த இடம்) முதலாகிய பலவும் 'உறுகாறும்'—(தன்னைவிடாமல் சூழ்ந்து) நிலைத்திருக்கும் வரையும் 'அந்தமை'—(அழிந்துபடும் உடம்பை, பழமையான அறியாமையால் யானென்று கொள்கின்ற முன்னர் உரைத்த) அந்த உட்பற்று, 'விறகு ஆர் அழல் போலும்'— விறகை அடைந்த நெருப்பு (மேல் மேலும் விறகையே தின்று மிகுந்து மூளுவது) போன்று 'உள்ளக்கண்'—ஆன்மாவிடத்து, 'மாறாது என்று'— ஒழியாது என்று கூறிக் கொண்டே, 'உந்தீபற'—உந்திப்பறவுங்கள், சிறுமிகாள் உந்திப் பறவுங்கள்.

பெண், பொன், மண் முதலாய புறப்பற்றுக்கள் தன்னைச் சுற்றி நெருங்கியிருக்கும் வரை, உடம்பை யானெனக் கொள்ளும் உட்பற்று ஒழியாதென ஈண்டு உணர்த்தினாராயிற்று.

## எடுத்துக் காட்டு:—

**தேவிகாலோத்தரம்:—**

"மூண்டு பற்றி முழங்கி யெழுங்கனல்
ஈண்டு காட்டம் இலதேல் இலதாகும்
தீண்டும் அப்பொருள் இன்றெனில் சித்தமும்
மாண்டு தோற்றம் இலதாய் மடிந்திடும்".

**திருவள்ளுவர்:—**

"அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு".

**மேலும்:—**

"மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை."

(தொடரும்)

குறிப்பு:— 1 காட்டம்=விறகு, 2 புலம்=பொறிகரணங்கள், 3 தொடர்ப்பாடு=பற்று.

சைவசித்தாந்தம்,

# சிவஞானபோதம்.

அருட்டிரு. திருநீ. சண்முகானந்த சுவாமிகள்
(ம து ரை.)

முன் (ம 1 இ 11 ப 159) தொடர்ச்சி.

மேற் கூறியது கொண்டு ஏகமாகிய பிரமத்தை ஏகமென்றல் பொருத்த முடைத்தே யாயினும், யாண்டும் அவ்வாறே ஏகமென்னுது சிலவிடங்களில் "பிரமம் அத்துவிதம்" எனவும் பேதங் கூறியது கொண்டு அத்துவிதம் இருபொருட் கண்ணதெனக் கொள்ளின் ஒரு பொருளை அத்துவிதம் என்றல் பொருந்தாதன்றோ எனின் :— வியாப்பியமும் வியாபகமும் ஆதல் ஒப்புமை மாத்திரையே பற்றி வரும் குணகுணிகளாகிய பண்ணும் அதனின் வேறன்றாய் எண்ணப் படும் இசையும் போலவும், பழமும் அதனின் வேறன்றாய் எண்ணப் படுஞ் சுவையும் போலவும், யாங்கணும் வியாபகமாய் இறைவன்றிரு வருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான் சுருதி ஏகமென் னுது, பிரமம் அத்துவிதமென்று சில இடங்களிற் கூறுமாகையால் ஆண்டுப் பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதென்னும் பொருட்டாகலான் அஃது ஏகமென்பதனோடு முரணுமாறில்லையென வுணாக. இதனுனே அவையே தானே யாதல் வலியுறுத்தப்பட்ட வாறறிக.

அற்றேல் இங்ஙனம் வேறு வேறுவமை கூறுதல் அநேகாந்த வாதமாமெனின்:— அற்றன்று ஏகாந்த வாதமேயாம் எங்ஙன் எனின்:— அரக்கையுருக்கியதனோடு சேர்த்த கற்பொடி அவ்வரக்கினோடொன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல, இறைவன் உயிர்களின் ஒருங்கு கூடி நின்று நீக்கமின்றியுடனாகலால், தானேயாயும், உலகே யாயும், தானே யுலகேயாயும் நிற்பன்.

அற்றேல் வாமதேவ முனிவன் முதலியோர் "யானேயுல கெல்லாம் ஆயினேன்" எனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்திரத்தில் "யானே யெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன்" என உயிர்கள் மேல்வைத்துக் கூறியதாலும், உயிர்களும் இவ்விலக்கணத் தனவாவான் செல்லுமெனின்:— அற்றன்று. பாசக் கூட்டத்தின் நீங்கித் தனியாய் நின்ற வுயிர்களின் அகத்து அம்முதல்வன் சோகம்பாவனை யால் வேற்றுமையின்றித் தோன்றலான் முத்திக் காலத்தங்ஙன் கூறிய தென்றுணர்ந்து கொள்க. இவ்வொற்றுமை பற்றியன்றே பகவற் கீதையில் காண்டீவனுக்குக் கண்ணபிரான் "யானே யுலகெல்லாம்

ஆயினேன்'' என்றதும், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதும், ஏனையவற்றைக் கைவிட்டு எனையே வழிபடுக என்றதும் அதனைக்கேட்ட காண்டீவனும் சாங்காறும் சிவபூசை செய்தலும் கண்ணன் மேலிட்ட மலர்கள் முதல்வன் றிருமுடி மேற்கண்டதும் என்றுணர்க. மேலும் கண்ணபிரான் உபமன்னியு முனிபாற் சிவதீக் கைபெற்றுத் தன்னையுந் தலைவனையு முணர்ந்தோன் ஆகலின் சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதல் அறிக.

இனி இவ்வதிகரணத்தாற் போந்த கருத்துக்களனைத்தையும் "புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் களவாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பில தாய் இருள்வெளி போற் பேதமுஞ் சொற்பொருள் போற்பேதா பேதமுமின்றிப் பெருநூல் சொன்ன, அறத்தினால் விளைவதாய் உடலுயிர்க்கண் அருக்கன் அறிவொளி போற் பிறிவருமத்துவிதமாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்'' எனவருஞ் சிவஞான சித்தியாராலும்

"கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி
யவனுளமா சில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு''. —எனவும்

"ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணொன்றின்று
லக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு'' —எனவும்

"பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
தத்துவித மென்றறையு மாங்கு''. —எனவும்

"அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப வின்று,, எனவரும்

மெய்கண்டார் திருவாக்கானும் ஓர்ந்துணர்ந்து கொள்க.

இவ்வதி கரணத்தாற் பொன்னும் பணியும் போலபேதமென்னும் மாயாவாதி முதலியோரையும், சொல்லும் பொருளும் போற்பேதா பேதமென்னும் பரிணாமவாதிகளையும், இருளும் ஒளியும் போற் பேதமென்னும் ஏனைச் சமயத்தாரையும் மறுத்து, ஒன்றாய்

நிற்றலும், உடனாய் நிற்றலும், வேறாய் நிற்றலும், ஆகிய அத்து விதத்தினுண்மையை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்திய வாறு கண்டுகொள்க.

## 2—ம் சூத்திரம். 2—ம் அதிகரணம்.

**"ஆணையின் இருவினையின்" என்பது. இதனை இருவினை யதிகரணமென்றுங் கூறுப.**

முதலதிகாரணத்து இறைவன் ஆன்மாக்களின் வேற்றுமை யின்றி நிற்பன் என்றமையால், அவ்வியல்புகொண்டு ஆன்மாக்களின் பொருட்டே ஐந்தொழில் செய்வனென்பது பெறப்பட்டமையின், அது இறைவனுக்கு இலக்கணமென்பது வலியுறுத்தப்பட்டது. அங்ஙனமாயினும் வாழ்வார்சிலருந்தாழ்வார்சிலரும், துறக்கமெய்து வார் சிலரும் நகரமெய்துவார் சிலரும், ஆயுள் நீட்டிப்பார் சிலருங் குறைவார் சிலரும், ஆகவிங்ஙன்வேற்றுமை காண்டலின், இறைவன் ஆன்மாக்களை யெல்லாம் ஒப்பநோக்காதும் அருளின்றியு மிருத்தலின் அவனையிறைவ னென்றலெங்ஙன்? என்னும் ஆசங்கை வர, அதனை விலக்கும் வாயிலாய்த் துணைக்காரணங்கள துண்மைக்குப் பிரமாணங் கூறி அவ்வாசங்கையை நீக்க வெழுந்தது இவ்வதிகரணமாம்.

சாங்கியர் இருவினையீட்டலும் நுகர்தலும் மூலப்பகுதியிற் றோ ன்றிய புத்திதத்துவத்துக்கே யென்றும்,உலகாயதர் முதலியோர்உடம்பு முதலியவற்றிற்கே யென்றும் கூறுப. அஃதமையாது. என்னை? பல பிறவிகளில் ஈட்டப்பட்டுச் சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணிய பாவங்களே ஈண்டு இருவினை யாகலின், அவற்றை ஈட்டலும் நுகர்தலும் ஆன் மாக்களேயாம். எனவே அவரவர் வினைக்கேற்பவைந்தொழிலியற்றும் இறைவன் ஒப்ப நோக்காதும் அருளின்றியு மிருத்தல் பொருந்தாமை யின் அந்நோக்கலும் அருளும் உடையனே யாம், அற்றேல் இரு வினைக்கு முதன்மையேயன்றி அவற்றின் வழி நின்றியற்றும் இறை வனுக்கு அஃதில்லையெனவாகி மீண்டும் இலக்கணவழுவாய்ச்*"சுற்றிப் போயுஞ் சுங்கத்துறையில் வந்து கூடுதல்" என்னும் நியாயமன்றோ! எனின்:- அற்றன்று "ஆணையின்" என்றமையான் இருவினையும் இறைவனாணை யான் வருவனவன்றித்தாமே வருஞ்சுதந்தரமுடையவன் மையின், அது கொண்டு இறைவனுக்கு ஐந்தொழிலியற்றலாகிய விலக் கணம பொருந்து மாகலின் வழுவாமாறில்லையாம். ஆகவே இந்நியாயம் ஈண்டைக் கேலாமை யுணர்க

அற்றேல் வினையுண்டெனில் அதுவே யமையும், இறைவன துண்மை யமையாது; இறைவனுண்டெனில் அவனே யமையும்.

---

* இதனை வடநூலார் "கட்ட குடிப் பிரபாத நியாயம் என்பர்,

வினையுண்மையமையாது; இரண்டுங்கோடல் மிகைப்படக்கொள்ளலாய் ஒருதாளுநன்றி யொருதாளைத் தூக்கிநின்றாடும் *"மயிற் கூத்தின்முறைமை" என்னும் நியாய மன்றோவெனின்! உலகின்கண் வேந்தராயினார் தண்டத் தொழில் செய்வார் மாட்டுத் தம் ஆணையை வைத்து அவரைக் கொண்டு அத்தொழில் செய்வித்தலே யன்றித் தாமேயத் தொழில் செய்யார். அவ்வாறே இறைவனுந் தன்னாணையை இருவினையின்பால் வைத்து அவற்றைக்கொண்டு அப்பயன் நுகர்வித்தலேயன்றித்தான் நுகர்வியாமை முறைமையாகலின், இங்கியாமும் பொருந்தாமையறிக. இவ்வுவமைப் பொருளையே "வையகங்காப்பான் செல்கை வழக்கன்றேவூர் காப்பான்போல்" எனச்சித்தியாருங்கூறிற்று ஈண்டுக்கூறிய தண்டத்தொழிலையே, திருநாவுக்கரையரும் "கோடிகாவனைக் கூறீரேற் கூறினேன்—பாடிகாவலிற்பட்டுக் கழிதிரே" என்னுமிடத்துப் "பாடிகாவல்" எனவருளியதூஉம் என்க.

இதுகாறுங் கூறியவாற்றான் இல்லது தோன்றாது என்னும் நியமம்பற்றி முன்உளதாய புண்ணிய பாவமெனும் இருவகைச் சஞ்சிதவினையே தன்பயனாகிய இன்பத்துன்பங்களையும், அவற்றை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையும் தோற்றுவிக்க, அவ்வின்பத்துன்ப நுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையின் சித்தாகிய வுயிரே அவ்வுடம்பிற பொருந்தி, அவற்றை நுகருமெனவும், முன் செய்த வினை நுகருதற் கேதுவான முறைமையின் மேலைக்கு வினையுளதாமெனவும் உழவர் செய்யுந் தொழிற்குத்தக்க பயனை விளை நிலம் விளைப்பதன்றியத் தொழில் தானே விளைவிக்க மாட்டாதது போல, உணவும் வித்துமாய்த் தொன்று தொட்டு வரும் அவ்வினைகளை வள்ளலாகிய இறைவனே யவ்வுயிர்கட்குக் கூட்டுவன்எனவும், அவ்வாறின்றி வினைதானே உயிர்கட்குப்பயனாய் வந்து பொருந்தமாட்டாதெனவுங் கண்டுகொள்க. ஈண்டு இறைவனுக்கு வினைவேண்டப்படும் என்பதற்கு வேந்தனையும் வினையிறைவனையின்றி யமையாதென்பதற்கு உழவுதொழிலையும் உவமைகளாகக் காண்க. (தொடரும்)

---

* இதனை வட நூலார், "மயூர நிர்த்தன நியாயம்" என்பர்.

---

## பிழை திருத்தம்

சிவஞானபோதம். இதழ் 11 பக்கம் 158.

பிழை :— அ. என்னும் எழுத்து அப்பிரகாசம் என்றவிடத்து வருமொழிப் பொருளின் மறுதலையினையும். (என்பது)

திருத்தம் :— அ. என்னும் எழுத்து அப்பிரகாசம் என்ற விடத்து வருமொழிப் பொருளின் இன்மையினையும், அதன்மம் என்றவிடத்து வருமொழிப் பொருளின் மறு தலையினையும், (என்பது)

# யோக சிகோப நிஷத்—தமிழ் பொழிப்புரை.

தவத்திரு. திரிமூர்த்தி சுவாமிகள்.
(ஸ்ரீ சாது சுவாமிகள் ஆஸ்ரமம், பழநி.)

முன் (ம 1 இ 11 ப 154) தொடர்ச்சி.

ஆகையால் அவைகள் பிரம்மமாகவே உள்ளன. நீயும் அவைகளைப் பிரம்மமென்றே உள்ளத்திற்கருதுக. மற்றும் அவற்றிற்காணப்படும் பல்வேறு நாம ரூபங்களையும் பிரம்மமாகவே சிந்திப்பாயாக. மீண்டு மவற்றில் நிகழ்கின்ற தொழில்கள் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது பிரம்மமே. ஆகையால் அத்தொழில்களையும் பிரம்மமாகவே எண்ணுவாயாக. தங்கக் கட்டியிலிருந்து உண்டான காப்பு, கடகம், குண்டலமுதலிய வற்றிற்கு எங்ஙனம் தங்கமே உண்மையாய் உறைவிடமாயுள்ளதோ, அங்ஙனமே பிரம்மத்திலிருந்து உண்டான உலகிற்கும் பிரம்மத்தினியல்பே உளதாதல் உண்மையும் உறுதிப்பாடுமெனக் கண்டு தெளிக. (7)

## (அ ... கை) பிரம்மத்தினும் வேறுகாண்பவனுக்கே பயத்தி னடைவைக் கூறல்.

யாதொரு பகுத்தறிவற்ற மூடன் ஜீவான்ம பரமான்மாக்களுக்கு சிறிதேனும் வேற்றுமை செய்துளனோ, அறிவிலியாகிய அவனுக்கே அச்சம் உளதாமெனக் கூறப்பட்டுளது. எந்த பரமான்மாவை அறியாததால் வேற்றுமை உளதாயிற்றோ, அவ்வறியாமையாலேயே ஆன்மாவினின்றும் ஜீவனை வேறுபிரித்துக் காண்கிறான். எப்பொழுது அஞ்ஞானம் நீங்கப்பெறுவனோ, அப்பொழுது எல்லாம் ஆன்மாவே எனக்கண்டவனாய் அணுத்துணையும் ஆன்மாவினும் வேறு இல்லையெனக் கண்டு தெளிகின்றான். (9)

## (அ .. கை) பழகிநின்ற உலகைப் பொய்யெனக் கூறல்.

இந்தவுலகமானது பல்வேறு பழக்க வழக்கங்களைத் தாங்கி நிற்பதாயினும், அறுசுவையுண்டி முதலியவற்றால் அனுபவிக்கப்படுவதாயினும், பொய்யென்றே அறியவேண்டும். ஏனெனின் ஒவ்வொரு அவத்தையிலும் இவ்வுலகு தோன்றுதிருப்பதே காரணமாகும். எங்ஙனமெனின், சொப்பனவத்தையில் விழிப்புலகம் இல்லையாகிறது. அங்ஙனமே விழிப்புநிலையில், செப்பன உலகு இல்லையாகிறது. இவ்வ்ண்டுமே தூக்க நிலையில் இல்லையாகின்றன. இத்தூக்கமும், நனவு ...ல் இருப்பதில்லை. ஆகையால் முக்குணங்களால் தோன்றிய

மூன்று அவத்தைகளும் பொய்யே ஆகின்றன. மூன்று அவத்தைகளிலும் தொடர்ந்து நின்று அறிந்து கொண்டிருந்தது யாதொரு சிதான்மாவோ, அதுநித்தியமாய்க் குணங்களைக் கடந்து நிற்பதென அறியவும். (12) மற்றும் மண்ணில் இது குடம்என்ற மயக்கவுணர்வும் கிளிஞ்சிலில் இது வெள்ளியென்ற வுணர்வும், உண்மையாய் ஆராயுமிடத்து குடம் மண்ணாகவும், வெள்ளி கிளிஞ்சிலாகவும், எங்ஙனம்-ஆகிறதோ, அங்ஙனமே பிரம்மத்தினிடத்தில் ஜீவனது இருப்பும் ஆராயுமிடத்துப் பொய்யாய்ப்போம் என்று அறிக குடம் என்ற பெயர் மண்ணினும், குண்டலமென்ற பெயர் பொன்னினும், வெள்ளி என்ற பெயர் கிளிஞ்சிலினும், பொய்யாய் மறைவது போல, ஜீவனென்ற பெயரும் பரத்தில் பொய்யாய்ப் போகிறது. ஆகாயத்தில் நீலநிறம் எங்ஙனம் பொய்யாய்த் தோற்றமாத்திரமாமோ, களர் நிலத்தில் நீரின் தோற்றம் எங்ஙனம் பொய்த்தோற்றமோ, கட்டையில் புருடனது தோற்றம் எங்ஙனம் பொய்யாகிறதோ, அங்ஙனமே சித்வடிவ ஆன்மாவினிடத்தில் உலகம் பொய்த்தோற்றமே என அறியவும். பெரிய இருட்டில் வேதாளந்தோன்றுவது போலவும், சொப்பன நகரம் போலவும், ஆகாயத்தில் இரு சந்திரர்களின் தோற்றம் போலவும், உண்மைப் பொருளாகிய ஆன்மாவில் உலகின் தோற்றம் உளது, என்பது அறிக. எப்படி தண்ணீர் ஒன்றே அலை, திவலை, நுரை முதலிய வேற்றுருப்புக்களாய் விளங்குகின்றதோ, எங்ஙனம் மண்ணே குடம் என்ற பெயரோடு விளங்குகின்றதோ, எங்ஙனம் நூலிழைகள் ஆடையென்ற பெயரால் விளங்குகின்றதோ, அங்ஙனமே சித்து ஒன்றே உலமென்ற பெயரால் தோற்றமுறுகின்றது. ஆகையால் எல்லாவற்றையும் ஒப்பற்ற பிரம்ம வடிவென்றே அறிந்து நிலை பெறுக. (17)

### (அ....கை) எல்லாமாய் நின்ற தனது வடிவில் உலகத்தின் வேற்றுமை முற்றும் பொருத்தமற்றது எனக் கூறல்

உலகில் எங்ஙனம் மலடி மகனில்லையோ, எங்ஙனம் மருபூமியில் தண்ணீர் இல்லையோ, எங்ஙனம் ஆகாயத்தில் மரமில்லையோ, அங்ஙனமே பரத்தில் உலகத்தினிருப்பும் இல்லையென்றே அறிக. இது குடம் என்று அறிந்தபொழுதும் எங்ஙனம் மண்ணே மிகுதியாய் விளங்குகின்றதோ, அங்ஙனமே இது உலகமென்று அறியப்படினும் பிரம்மமே விளங்கி ஒளிருகின்றது. (19)

### (அ...கை) ஆன்மாவினிடத்தில் தேகமுதலியவற்றின் தோற்றம் அஞ்ஞானத்தால் செய்யப்பட்டதெனக் கூறல்:—

ஞான அஞ்ஞானி இருவர்களும் ஒரே உலகை இரண்டாகக் காண்கின்றனர். அஃதாவது ஞானி எப்பொழுதும் உலகை மிகத் தூய்மையான தனதான் மாவென்றே கண்டு இன்புறுகின்றான். அஞ்ஞானி எப்பொழுதும் உலகைத் தூய்மை யற்றதாய் துன்ப வடிவாய்த் தன்னின் வேறாய்க் கண்டு துன்புறுகின்றான். (2

ஓம்.

# தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் பதினோராவது மாநாட்டின் நிகழ்ச்சியும், தீர்மானங்களும்.

தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங்கமேன்றும்
ஞாயிறுபோன் மக்களுக்கு நன்மைசெயத்—தாயாகும்
உண்ணு முலையாம் உமைசே ரோளிப்பிழம்பாம்
அண்ணு மலைதுணையா மால்.

நிகழும் மன்மத ஆண்டு கார்த்திகைத் திங்கள் கஉ-ம்நாள் (28—11—55) திங்கட்கிழமை திருவண்ணுமலை அண்ணுமலையார் கோவிலினுள் அமைந்த "சத்தி விலாச சபா" மண்டபத்தின்கண் **அருட்டிரு சுவாமி அருணகிரிநாதரவர்கள்** தலைமையில் தமிழ் நாட்டுத் துறவிகள் சங்க **பதினோராவது மாநாடு** நடைபெற்றது. இம்மாநாட்டிற்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் துறவிகள் பலரும் துறவிகளைப் போற்றும் ஏனைய பெரியோர்களும் வந்து குழுமியிருந்தார்கள். துறவிகள் திருக்கூட்ட ஊர்வலம் காலை மணி 7-க்கு சா. நா சாதுக்கள் சத்திரத்திலிருந்து கோயில் யானை, விருது, கொடிகள், மேளவாத்தியம் முதலிய சிறப்புகளுடன் துறவிகள் தமிழ் மறை ஓதிவர மாட வீதியை வலமாக வந்து சத்திவிலாச சபா மண்டபத்துட் சென்று மாநாடு தொடங்கப்பெற்றது.

## மாநாட்டு நிகழ்ச்சிகள்.

**தவத்திரு சாது சிங்காரவேல் அடிகளார்** தமிழ் மறை ஓதிக் கடவுள் வணக்கம் செய்தார்கள்

திருவண்ணுமலை ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் **திருவுயர் A. கோபால் படையாச்சி** B. A, அவர்கள் துறவிகள் சங்கத்தின் நோக்கம் என்பது பற்றியும், துறவிகள் தொண்டு நாட்டிற்கு மிக அவசியமென்றும், துறவிகள் பெருமையினையும் கூறித் திறப்புரை செய்தார்கள்,

பின்னர் **அருட்டிரு சாந்தானந்த அடிகளார்** முன் மொழியவும் **சிவத்திரு குக. சதாசிவ அடிகளார்** வழிமொழியவும் தலைவர் **தவத்திரு சுவாமி அருணகிரிநாதரவர்கள்** மாநாட்டிற்குத் தலைமைவகித்துத் தலைமையுரை யாற்றினார்கள்.

சங்கச்செயலாளர் **சுவாமி சொருபானந்தா அவர்களால்** ஆண்டு அறிக்கை படிக்கப்பெற்றது.

## சொற்பொழிவுகள்.

"சமய வாழ்வு", "திருமுறை விளக்கம்", "துறவின் பயன்" "அடியார் பெருமை", "சாதுக்கள் தொண்டு சமயத்துக்கு இன்றியமையாதது", 'துறவு நெறி", "கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு ஆட்செய்மின்" என்ற தலைப்பில் திரு. சாந்தானந்த அடிகள், திருவண்ணாமலை தமிழறிஞர் திரு. அ. சாமிநாதமுதலியாரவர்கள், பழநி, சித்தபாலைய தேசிகர் ஆதீனப் புலவர், திரு. ஐயாறு அடிகள். திருவண்ணாமலை பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர் திரு. துரைசாமி முதலியார் B. A., L. T., அவர்கள், திருச்சி, திரு. கி. அ. பெ. விஸ்வநாதம் அவர்கள், தருமபுரம், தமிழ்ப்பேராசிரியர் திரு. முத்து சு மாணிக்கவாசக முதலியார் அவர்கள், திருவண்ணாமலை, புரிசைக்கிழார் பெருஞ்சொற்கொண்டல் சு முருகேச முதலியார் அவர்கள் ஆகிய இவர்கள் எடுத்துக்கொண்ட பொருளை இனிது விளக்கி மிக அழகாகப் பேசினார்கள்.

பின் தலைவர் அவர்கள் முடிப்புரை கூறினார்கள். சென்ற மூன்றாவது மாநாட்டில் சீர்திருத்தி அமைக்கப்பெற்ற விதி முறைப்படி சங்கம் நடைபெற வேண்டுமென (ஷை விதிமுறைகளைப்படிக்கப்பட்டு) மாநாடு ஒருமனதாக தீர்மானித்தது. பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் மாநாட்டினரால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேறின. நன்றி கூறியதோடு மாநாடு இனிதே நிறைவெய்தியது.

### குறிப்பு:—

பதினோராவது மாநாடுகுறித்த முன்னறிவிப்புச் சொற்பொழிவுகள் 25—11—55முதல் 27—11—55வரை காலை மணி9-முதல் 12-வரை அருணை சத்தி விலாச சபாமண்டபத்தில் நிகழ்ந்தன.

**முதல் நாள்:—**

கடவுள் வழிபாடும்—தமிழ்மறை ஓதலும் நிகழ்ந்தபின் திரு. சுவாமி அருணகிரி நாதரவர்கள் தலைமையின்கீழ் "எது சமயம்" "தொண்டு" என்னும் பொருள் பற்றி திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் உயர்நிலைப்பள்ளி, தமிழாசிரியர், திரு. நக்கீரனார் அவர்களும், சிதம்பரம், திரு சுப்பிரமணிய அடிகளும், ஆராய்ச்சியோடும், அன்போடும் சொற்பொழிவாற்றினார்கள்.

**இரண்டாம் நாள்:—**

கடவுள் வழிபாட்டிற்குப்பின் திரு. குக. சதாசிவ அகளார் தலைமையில் "தமிழ் நாடும்—சமயமும்" "சமய வளர்ச்சி" என்ற தலைப்பில் சென்னை. திரு. சுவாமி அருணகிரி நாதரவர்கள், சென்னை, திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை, B. A. L. T அவர்கள் ஆகிய இவர்கள் நாடு, மொழி, சமயம், இவைகளில் மக்கள் மனம் பதியுமாறு அரிய சொற்பெருக்காற்றினார்கள். [தொடர்ச்சி 176-ம் பக்கம் பார்க்க,

மன்மத ஆண்டு கார்த்திகைத் திங்கள் கஉ-ம் நாள் (28—11—55) நடைபெற்ற பதினைந்தாவது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பெற்ற

## சங்கச் செயற்குழுவினர்.

**தலைவர்:—** **தவத்திரு. சுவாமி அருணகிரிநாதர் அவர்கள்**
அகத்திய குருகுலம். சாதி நாராயண தேசிகர் நிலையம், நெ. 200, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை.

**துணைத்தலைவர்:—** **தவத்திரு பாலைய சுவாமிகள்,**
சித்தபாலைய சுவாமிகள் மடம், பழநி.

**செயலாளரும் 'துறவி' பதிப்பாளரும்** **தவத்திரு. சுவாமி சொரூபானந்தா,**
சித்திவிநாயகர் மடம், கீழ்ப்பாலூர், கலசபாக்கம் (வழி) வடாற்காடு.

**பொருளாளரும் துணைச்செயலாளரும்** **தவத்திரு டாக்டர் R. துளசிமணிசுவாமிகள்**
ச. சிதம்பர சுவாமிகள் மடம், புதூர், மங்கலம் (அஞ்சல்) திருவண்ணாமலை.

**அமைப்பாளர்.—** **தவத்திரு. முத்தையா சுவாமிகள்,**
சின்ன மடம், எறும்பூர். வளையமாதேவி, (அஞ்சல்) சிதம்பரம் வட்டம்.

## குழுவினர்.

தவத்திரு. **குக. சதாசிவ அடிகள்,**
திருவள்ளுவரில்லம், சங்கேந்தி எடையூர் (அஞ்சல்) திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை.

,, **சாந்தானந்த அடிகள்,**
ஆனந்தாஸ்ரமம், எர்ரேபல்லி, புல்லூர்(அஞ்சல்)பூதல் பட்டு (வழி) சித்தூர்.

,, **சுவாமி முக்தானந்தா அவர்கள்,**
சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம். வியாசர்பாடி, சென்னை.

,, **சபாபதி சுவாமிகள்,**
மௌன சுவாமிகள் மடம், சபாநாயகர் வீதி, சிதம்பரம்.

,, **சுவாமி சகஜானந்தா** எம். எல். ஏ., **அவர்கள்**
நந்தனர் மடம், சிதம்பரம்.

,, **குமரகுருபர சுவாமிகள்,**
அன்னதான சமாசம், அடிவாரம், பழநி.

,, **இராமனுத சுவாமிகள்,**
ஈசானிய மடம், திருவண்ணாமலை.

,, **நாகப்பூர் சுவாமிகள்,**
சாது முனிவர் ஆச்ரமம், அடிவாரம், பழநி.

,, **பெருமாள் சுவாமிகள்,** திருவண்ணாமலை.

,, **முருகானந்த சுவாமிகள்,**
சமரச சுத்த சன்மார்க்க சங்கம், நெ. 33, கடை வீதி, அலசூர் (அஞ்சல்) பெங்களூர்-1.

174-ஆம் பக்கத் தொடர்ச்சி

**மூன்றாம் நாள்:—**

*இறை வழிபாடும்—தமிழ்மறை ஓதலும் நிகழ்ந்தபின் திரு. சாந்தானந்த அடிகளார் அவைத்தலைமையில், "**தமிழும்—சிவமும்**" "**அருளும்—அன்பும்**" என்ற பொருள்பற்றி பெங்களூர் திரு. முருகானந்த அடிகளும், பழநி, திரு ஐயாறு அடிகளும் ஆராய்ச்சி-யோடும், அன்பு கனிந்த உளத்தோடு மிக அழகாகவும் நயம்படவும் பேசினார்கள். தலைவர் முடிப்புரைக்குப்பின் முன்னறிவிப்புச் சொற்பொழிவின் மூன்றாம் நாள் கூட்டம் முடிவுற்றது.*

---

## தீர்மானங்கள்.

இந்தியாவிலே உள்ள இந்து மதத்தைச் சார்ந்த பல்வேறு பிரிவினையுடைய சாதுக்கள், சந்நியாசிகள், துறவிகள், மனம் மிகமிகப் புண்படும்படியாக 1955-வருடம் நவம்பர் மாதம் 2-தேதி ர்ாஜ்கோட்டில் இந்தியாவின் முடிசூடா மன்னராகிய மத்திய பார்லிமெண்டின் பிரதமர் ஸ்ரீ பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்தியாவில் உள்ள சாதுக்களில் பெரும்பாலோர் அட்டைப் புழுக்களைப்போல் பிறரை உறிஞ்சி வாழ்பவர்கள், சமூகத்திற்கு விரோதசக்திகள், நாட்டிலுள்ள 55-லட்சம் சாதுக்களில் 15000-சாதுக்களே உண்மை சந்நியாசிகளாக இருக்கக்கூடும் என்று பேசிய பேச்சுக்களை பத்திரிகை வாயிலாகக் கண்டு நம் தமிழ்நாட்டிலுள்ள உண்மைத் துறவிகள் அனைவரும் மிகவும் வருந்துகின்றோம் என்பதை மாகாண சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்-கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவில் உள்ள 55-லட்சம் சாதுக்களில் 15000-சாதுக்களே உண்மை சந்நியாசிகளாக இருக்கக் கூடும் என்று பிரதமர் அவர்கள் கூறுவதால், மற்றைய 54-லட்சத்து எண்பத்தையாயிரம் பேர்களும் அட்டைப் புழுக்களைப்போல் பிறரை உறிஞ்சி வாழும்படி யாகவும் சமூகத்துக்கு விரோத சத்திகளாகவும், இந்தியாவிலே பெருகிக் கொண்டிருக்கும்படி செய்த தவறு இந்திய அரசாங்கத்தைச் சார்ந்ததா ஏனைய துறவிகளைச் சார்ந்ததா என்பதை இந்திய அரசாங்கம் சிந்தித்து அக்குறைபாட்டை நீக்க ஆவன செய்யுமாறு இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

இந்திய அரசாங்கம் செய்யப்போகிற மொழிவாரி ராஜ்யப் பிரிவினையை தமிழ் நாட்டின் வடவெல்லையில் சித்தூர் ஜில்லாவில் உள்ள தமிழ்ப்பகுதிகளையும், தென்பகுதியில் தி. கொ. யில் உள்ள தமிழ்ப் பகுதிகளையும், கிராமவாரியாக, மெஜார்ட்டியின்படியும், அங்கங்குள்ள தமிழ்மக்கள் விருப்பப்படியும், தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டுமாய் மாகாண சர்க்காரையும், மத்திய சர்க்காரையும், எல்லைப் பிரிவினை கமிட்டியையும், தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் ஏகமனதாக கேட்டுக்கொள்கின்றது.

MAHAMAHOPADHYAYA

## சங்க வளர்ச்சிக்காக பொதுமக்கள் அளித்த நன்கொடை விபரம்

| ஊர் | | பெயர் | ரூ அ பை |
|---|---|---|---|
| சென்னை | திரு. | சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் | 110—0—0 |
| ,, | ,, | S. குப்புசாமி முதலியாரவர்கள் | 50—0—0 |
| ,, | ,, | S. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் | 50—0—0 |
| ,, | ,, | R. மாசிலாமணி முதலியார் அவர்கள் | 15—0—0 |
| ,, | ,, | பெருமாள் சுவாமிகள் | 10—0—0 |
| பழனி | ,, | பாலைய சுவாமிகள் | 10—0—0 |
| எறும்பூர் | ,, | முத்தைய சுவாமிகள் | 10—0—0 |
| மகிழங்கோட்டை | திரு | சிங்காரவேல் சுவாமிகள் | 2—0—0 |
| பெருகமணி | திரு | கணபதி சுவாமிகள் | 2—0—0 |
| நெடுவேலி | ,, | பரமானந்த சுவாமிகள் | 1—0—0 |
| பெங்களூர் | ,, | T கோவிந்தசாமி ஆச்சாரி அவர்கள் | 1—0—0 |
| மேல்பட்டி | ,, | ஆண்டாள் அம்மையார் அவர்கள் | 1—0—0 |
| | | ஆக நன்கொடை வரவு ரூ | 262—0—0 |

## தமிழ் நாட்டுத் துறவிகள் சங்க வரவு செலவு, ஐந்தொகைப் பட்டியல்.

16—12—54. முதல் 15—12—55. வரை

| | | |
|---|---|---|
| முன் இருப்பு | ரூ | 279—11—6 |
| சங்க உறுப்பினர் ஆண்டுக் கட்டணம் | ரூ | 18— 0—0 |
| சங்க வளர்ச்சிக்காக பொதுமக்கள் அளித்த நன்கொடை | ரூ | 262— 0—0 |
| ஆக மொத்த வரவு | ரூ | 559—11—6 |

REGED No. M. **6630**

## செலவு விவரம்.

| | |
|---|---|
| மாநாட்டு அழைப்பிதழ். நிகழ்ச்சி நிரல், ஆண்டறிக்கை, சொற்பொழிவு விளம்பரத்தாள், முதலியன அச்சு அடித்த கூலி | 39—7—6 |
| உறுப்பினர்கட்கும் அன்பர்கட்கும் அனுப்பிய தபாற் செலவுகள் | 11-15—9 |
| நோட்டுப் புத்தகம் எழுதுதாள் முதலியன | 0—6—6 |
| நடைபெற்ற மாநாட்டிற்கும் அச்சாபீஸ் முதலியவைகட்கும் போய்வர செயலாளர் பிரயாணச்செலவு | 9—8—0 |
| ஆண்டுவிழாவில் சொற்பொழிவாற்றிய தலைமைவகித்த துறவிக்கு பிரயாணச் செலவு | 3-10—0 |
| பத்தாவது மாநாடு முதல் பதினோராவது மாநாடுவரை உணவு, சமையற் கூலி, வேலையாட்கூலி, மேளம், பூமாலைகள், தேங்காய், பழம் முதலியவைக்கு ஏற்பட்ட செலவு | 197—1—9 |
| ஆக செலவு | 262—1—6 |
| இருப்பு | 297-10—0 |
| ஆக மொத்தம் வரவு செலவு | 559-11—6 |

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணாமலை
ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொருபானந்தா, கீழ்ப்பாலூர்.